★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 65630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 31௳ சனி (15—9—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 1௳ ஞாயிறு (16—9—56) [இதழ் 83

வாக்கெடுப்பைத் துரிதப்படுத்த இயந்திரம்

புதுடில்லி, செப். 14—

இப்போது மக்கள் சபையில் கைதூக்கும் முறையில் வாக்கெடுப்பு நடைபெறுகிறது. இதற்குப் பதிலாக, தாமாகவே வாக்குப் பதியும் இயந்திரங்களைப் பொருத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்!

புதிய மக்கள் சபை அடுத்த ஆண்டில் துவங்கும்போது இந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டுவிடுமாம்!

கைதூக்கும் முறையில் வாக்கெடுப்பிற்கு 10 முதல் 20 நிமிடங்கள் ஆகின்றன என்றும், இயந்திரம் வந்துவிட்டால் இது 11 விநாடிகளில் முடிந்துவிடும் என்றும் கூறப்படுகிறது.

நிதி மந்திரியின் பத்தினி வேடம்!

சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் திருச்சி காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசுகையில், தனக்கும் காமராசருக்கும் கருத்து வேற்றுமை எதுவும் கிடையாது என்றும், ஆட்சி பீடத்தில் இருந்து அவரை விரட்ட தான் முயற்சி செய்வதாகப் பேசப்படுவது அர்த்தமற்றது என்றும் தெரிவித்ததாக நம்பப்படுகிறது.

வரும் தேர்தல்களில் எதிர்க் கட்சியினரை எதிர்த்து வெற்றி பெற காங்கிரஸ்காரர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

கோடி கோடியாக உதவித் தொகை கொடுத்தாலும்!

விசைத் தறித் திணிப்பு எதிர்க்கப்படுமாம்!

கைத்தறி பாதுகாப்பே ஆட்சியாளர் கருத்தாம்

ஆறுயிரம் விசைத்தறி திணிக்கும் முடிவு என்ன ஆயிற்றோ?

அரசாங்க முடிவைத் திரித்துப் பேசுகிறார் கனம் சுப்பிரமணியம்

திருச்சி, செப். 14—

"கோடி கோடியாக உதவித் தொகை கொடுக்க இந்தியப் பேரரசு முன்வந்த போதிலும், விசைத்தறித் திணிப்புக்கு சென்னை அரசாங்கம் ஒரு பொறுப்பாளியாக இருக்காது."

இவ்வாறு நிதி அமைச்சர் சுப்பிரமணியம், பொதுக்கூட்டம் ஒன்றில் அறிவித்துள்ளார்.

உடையார்பாளையம் தாலுகாவிலுள்ள உடையார்த்தம்—ஜெயங்கொண்டம் ஆகிய இரு ஊர்களிலுள்ள கைத்தறியாளர்கள் சார்பில் அமைச்சருக்கு வரவேற்பு அளித்த போதுதான், மேற்கண்டவாறு, அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் திட்டவட்டமான வாக்குறுதி அளித்தார்.

மேலும் அவர், வரவேற்பிற்குப் பதிலளிக்கும் முறையில், அத்தொடர்பில், 'கைத்தறித் துறைக்கு மட்டுமே—சிறப்பாகக்கரைபோட்ட வேட்டி, புடவைகளை செசவு செய்யும் உரிமை இருக்கவேண்டும்' என சென்னை சட்டசபையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள ஒரு தீர்மானத்தையும், 'செஸ்' நிதி ஒதுக்கலையும், ஆலைத் துணிகளின் மீது விதிக்கப்பட்டுள்ள கலால் வரியையும் சுட்டிக்காட்டி, கைத்தறி நெசவாளர்கள் மீது தங்கள் ஆட்சிக்கு அதிக அக்கறை இருக்கிறது என வலியுறுத்த முயன்றார்.

கை நெசவைப் பாதுகாப்பது என சென்னை அரசாங்கம் உறுதி பூண்டு இருக்கிறது என்றும், மத்திய அரசாங்கத்தின் விசைத்தறித் திணிப்பு கண்டு நெசவாளர்கள் அஞ்சத் தேவையே இல்லை என்றும், அமைச்சர் குறிப்பிட்டார்.

குறிப்பு:—அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஆறுயிரம் விசைத்தறிகளை நடைமுறைக்குக் கொண்டுவர சென்னை அரசாங்கம் முடிவுகட்டி இருக்கிறது என்று சட்டசபையில் தொழில் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் கூறி இருப்பதை, நிதி அமைச்சர் இருட்டடித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆத்தீகர்களுக்கு மட்டுமல்ல

எல்லோருக்கும் 8 அணு வரி!

புதுடில்லி, செப். 14—

சிதம்பரம், சீரங்கம், இராமேசுவரம் போன்ற ஊர்களுக்கு ஆண்டவனைக் காண பக்தர்கள் சென்றாலும், மற்றவர்கள் வேறு காரியமாக சென்றாலும் திருவிழாவின்போது இரயிலில் போகிற எல்லா பிரயாணிகளுக்கும் அணு 8 வரி போடவேண்டுமென்று — இந்திய அரசாங்க இரயில்வே மந்திரி ஒரு சட்டம் கொண்டுவந்துள்ளார்.

'கொள்ளைக் குற்றம் புரிந்திருப்பதாக எனக்குப்படவில்லை'

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. மீதுள்ள வழக்கில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு

"கொள்ளையடித்தக் குற்றம் புரிந்திருப்பதாக எனக்குப்படவில்லை; எனவே, செஷன்ஸ் நீதிமன்ற விசாரணை தேவை இல்லை எனக் கருதுகிறேன்; சட்டப்படி தீர்ப்பளிப்பதற்காகக் கடலூர் சப்-மாஜிஸ்திரேட்டின்விசாரணைக்கு வழக்கைத் திருப்பி அனுப்புகிறேன்,"

என்று, பிப். 20—அர்த்தாலையொட்டி கடலூரில் கொள்ளை படித்ததாகவும கலாட்டா செய்ததாகவும் தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல் ஏ அவர்கள் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு, சென்னை உயர்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்கையில், நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்காக வழக்கறிஞர்கள் நாராயணசாமி (முதலியார்), வேணுகோபால் (நாயக்கர்), பி. கோகுலகிருஷ்ணன் ஆகியோர் வாதாடினர்.

சர்க்கார் தரப்பில் பப்ளிக் பிராசிகியூடர் வழக்கை நடத்தியிருக்கிறார்.

இந்தக் கொடுமை இன்னும் ஒழியவில்லை!

ஜெயப்பூரிலிருந்து 70 மைல் தூரத்திலுள்ள குன்ரோட் கிராமத்தில் 35 வயது நிரம்பிய மாது, இறந்த தன் கணவனின் பிணம் எரிந்துகொண்டிருந்த சிதையில் தானும் விழுந்து தீக்கிரையானாராம்!

இது சம்பந்தமாகப் போலீசார் 11 பேரைக் கைது செய்திருக்கின்றனராம்.

இன்ஷ்யூரன்ஸ் ஊழியர் அடையாளவேலை நிறுத்தம்

சர்க்கார் சம்பள விகிதத் திட்டம் நிராகரிப்பு

பம்பாய், செப். 13—

அகில இந்திய இன்ஷ்யூரன்சு ஊழியர்கள் செயற்குழு, சர்க்கார் வெளியிட்டுள்ள சம்பள விகிதம் முதலியன பற்றிய திட்டத்தை நிராகரித்ததுடன், அடுத்த மாத இறுதிக்குள் ஒரு சமரசமான முடிவு ஏற்படாவிட்டால் நவம்பர் முதல் வாரத்தில் ஊழியர்கள் ஒரு நாளைக்கு அடையாள வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்றும் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பிள்ளையார் சிலை உடைப்பு எதிரொலி!

ஜபல்பூர், செப். 14—

பிள்ளையார் சிலை ஒன்றை கடந்த 12-ந் தேதி இரவு யாரோ ஒருவர் இங்கு உடைத்ததின் எதிரொலியாக எழுந்த கலவரங்கள் நான்கு பேரைப் பலி கொண்டிருக்கின்றன; 17 பேர் படுகாயமுற்றிருக்கின்றனர்.

அமைதியை நிலைநாட்டப் போலீசாருக்கு உதவி செய்வதற்காக இராணுவமும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றதாம்.

நகரில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

இதுவரை சுமார் 500 பேர் வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

பிள்ளையார் சிலையை உடைத்தவர் உடனே கைது செய்யப்பட்டார் என்றும், ஆனாலும் மறுநாள் ஒரு பொதுவேலை நிறுத்தம் நடத்தப்பட்டது என்றும் சர்க்கார், அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

நிலைமை கட்டுக்கடங்கி இருப்பதாகவும், சர்க்கார் கூறியிருக்கிறது.

மேலும் அலிகார் முதலிய மூன்று வேறு நகரங்களிலும் சிறு சிறு கலவர சம்பவங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'ஓநாய் ஓடுவதற்கு உதவி செய்த உபகாரியல்லவா?'

'என் பசி தீர உன் பாலகனைக் கொடு'

'புலி கேட்காது; வடவர் கேட்கின்றனர்'

அண்ணு இடித்துரை

"தன் அருமைப் பாலகனை வீட்டில் தூங்கவைத்துவிட்டு, தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தத்தாய், திடீரெனப் புறக்கடையிலே, 'ஓநாய் ஓநாய்' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு, அக்கம் பக்கத்திலிருப்பவர்களின் துணை கொண்டு ஓநாயை விரட்டிவிட்டுக் குழந்தையைப் பார்க்க உள்ளே சென்றாளாம்.

"அங்கே ஒரு புலி வாட்டசாட்டமாக உட்கார்ந்திருக்கக் கண்ட அந்தத் தாய், 'அய்யோ, புலி வந்திருக்கிறதே!' என்று அலறினாளாம்!

"ஓநாய் ஓட உதவி செய்யவந்த உபகாரியாயிற்றே நான்; என்னைக்கண்டு ஏன் நடுங்குகிறாய்? நான் ஓநாயை விரட்டாதிருந்தால் உன் குழந்தை உயிர் பிழைத்திருக்க முடியாதல்லவா? ஆதலாலே, நான் இங்கேயே இருக்கிறேன்; உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்; எனக்குப் பசிக்கும்போது மட்டும் உன்னுடைய பாலகனைக் கொடுத்தால்போதும்'— என்று புலி கேட்டால், அது எவ்வளவு அக்கிரமமானதோ—அவ்விதம் கேட்கும் புலி ஓநாயை விட எவ்வளவு கடூர நெஞ்சம் படைத்ததோ அதைப்போலத் தான், இன்று வட நாட்டினர் 'வெள்ளையர்களை விரட்ட நாங்கள் உதவி செய்யவில்லையா? ஆதலாலே திராவிடத்தின் வளப்பத்தை எங்கள் வாழ்விற்குப் பயன் படுத்திக்கொள்ள உரிமையிருந்தால்போதும்' என்று கூறுகின்றனர்— 'ஏக இந்தியா' பேசுகின்றனர்!

"ஆனால் கொடும் புலிகூட அவ்விதம் கேட்காது—வடவர் கேட்கின்றனர்!

"இந்தியத் துணைக்கண்டத்தில் அதிகாரம் செலுத்திவந்த வெள்ளையரை ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்ற அனைவருமே கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாயினர்; இன்னும் சொல்லப்போனால் தென்னாட்டு மக்கள்தான் தீவிரக் கிளர்ச்சிகளில் முன் நின்றனர். ஆனால் இன்று வடநாட்டினர் ஏகபோக உரிமை கொண்டாடுகின்றனர்.

"வெள்ளையர் ஆட்சி கொடுமையானதென்றால், வடவர்கள் ஆட்சி கொடுமையும் வஞ்சகமும் நிறைந்ததென, நம் நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களே தங்களையும் மறந்து சில நேரங்களில் உண்மை பேசுவதை நாம் கண்டு வருகிறோம்.

வடக்கே 'வளம்' வளர்ந்து வருகிறது—தெற்கே 'குடிசைத் தொழில்' வளருகிறது!

"வடக்கே வளம் வளர்ந்து வருகிறது — தெற்கே குடிசைத் தொழில்தான் வளருகிறது; பக்ராநங்கல் அணைக்கட்டுத் திட்டம்—தாமோதர் அணைக் கட்டுத் திட்டம்—எரு உற்பத்திச் சாலை—என்று, இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது வடக்கில்!

"இவ்வாறு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது திராவிடம் புறக்கணிக்கப்பட்ட விவரத்தை அன்று திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக் காட்டியபோது, 'இவர்கள் விவேகமற்றவர்கள்'—என்று இழித்தும் பழித்தும் பேசினர்! சில காலம் கழித்து, நம் தமிழ்நாட்டு அமைச்சர்களே தாங்கள் ஏமாற்றமடைந்ததையும் நம் நாடு வடவரின் வஞ்சகத்திற்கு ஆளாக்கப்பட்டதையும் ஒப்புக்கொண்டனர்.

"'முதல் ஐந்தாண்டுத் திட்டம் தான் இப்படியாயிற்று; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் ஏமாறமாட்டோம்—சமர்த்தர்களாயிருப்போம்,' என்று வீராப்புப் பேசினர், நம் மாநில அமைச்சர்கள்!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கியிருப்பது ஏறத்தாழ 6,000 கோடி ரூபாய்!

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15–9–'56 சனி

சூயசு கொந்தளிப்பு

சூயசு கால்வாய் சிக்கலுக்குப் பரிகாரம் காண்பதற்காக, ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதமர் மென்சிசு தலைமையில், எகிப்து நாட்டுத் தலைவர் நாசருடன் பேசிய பேச்சு முறிந்துவிட்டது. அம்முயற்சிக்கு இத்தகைய முடிவுதான் கிடைக்கும் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான்.

எகிப்து நிலப்பரப்பில் ஊடுருவிச் சென்று கொண்டிருக்கின்றது சூயசு கால்வாய். அக்கால்வாயும் இரு கரைகளும் எகிப்து ஆட்சிக்கு உட்பட்டதே என்பது மிகமிகச் சாதாரண நியாயமாகும். இந்த உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு அகில உலகச் சட்ட நுணுக்கம் தெரிந்திருக்கத் தேவையே இல்லை.

குறிப்பிட்ட ஒரு நாட்டில் ஓடிக்கொண்டிருக்கின்ற ஒரு கால்வாய் மீது ஆதிக்கம் செலுத்த அக்குறிப்பிட்ட நாட்டின் அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறதா இல்லையா எனக் கேள்வி எழுப்புவதே வடிகட்டின அபத்தமாகும். அத்தகுக் கேள்வியை எழுப்புவதுடன் நில்லாது, தனக்கு இயல்பாக உள்ள அவ்வுரிமையைச் செயல்படுத்த ஒரு அரசாங்கம் முன்வரும்பொழுது, அம்முயற்சியைத் தவறு எனக் கூறுவதும் அதைக் கெடுத்தொழிக்க அச்சுறுத்துவதும் முன்னிலும் அபத்தமானதாகும்.

சூயசு கால்வாய் மீது ஆதிக்கம் செலுத்த இயல்பாக உரிமை கொண்டிருப்பது எகிப்தாகும். அதை ஒப்ப இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் மறுப்பதும், அவ்வுரிமையையே ஒழித்துக்கட்ட மறைமுகமாக முயற்சிப்பதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

அகில உலக மயமாக்கல் என்ற பெயரில் சூயசு கால்வாய் நிர்வாகத்தை, எப்பொழுதும்போல் தங்கள் ஆதிக்கத்தின் கீழே வைத்திருக்க வேண்டுமென பிரிட்டனும் பிரான்சும் விழைகின்றன. அவ்விழைவை விளக்கமாகத் தெரிந்துகொண்டிருக்கிற எகிப்து, மீண்டும் ஒருமுறை மேற்படி அரசுகளின் வஞ்சக வலையில் சிக்கிக்கொள்ள மறுப்பதில் வியப்பொன்றுமில்லை.

சூயசு கால்வாய் மீது ஆதிக்கம் செலுத்த எகிப்து நாட்டுக்குள்ள இயல்பான உரிமையை ஏற்றுக்கொண்டு, அதன் நிர்வாகம், கப்பல் போக்குவரத்து வசதியைப் பெருக்குதல், அதற்குரியக் கட்டண விகிதத்தை வரையறுத்தல் போன்ற விவகாரங்களில் பேச்சு நடத்தல் என்ற முறையில் பிரிட்டன் நடந்துகொள்ள முன்வருவதுதான் முறையாகும். அத்தகு முயற்சியில்தான் சூயசு கால்வாய் விவகாரத்தையும் நோக்க முடியும்.

சூயசு கால்வாய் விவகாரம் இன்றைய பயங்கரமான கட்டத்தை அடைந்திருப்பதற்கு முழுதும் பொறுப்பேற்கவேண்டியது பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுமேயாகும். மீண்டும் ஒரு உலகப் பெரும்போர் மூண்டுவிடக்கூடுமே என அஞ்சும் அளவிற்குப் பிரிட்டனின் நடவடிக்கைகள் தீவிரமாகிவருகின்றன.

இங்கிலாந்து பாராளுமன்றத்தில் பேசி இருக்கின்ற பிரதமர், சூயசு சிக்கலைத் தீர்ப்பதற்கான வேறு ஒரு முறையைச் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக, புதிய ஒரு போர்க்களம் அமைக்கும் போக்கினராகவே பேசி இருக்கிறார். அந்தப் பேச்சு, பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் இருந்துவரும் மனக்கசப்பை மேலும் கூடுதலாக்குவதற்கே உதவக்கூடியதாக இருக்கிறது.

அதுவுமன்றி, பிரதமர் ஈடன் பேச்சு, தற்கால நாகரீக உலகத்தவர் பேசும் பேச்சாகவுமில்லை. ஏமாந்த காலத்தில் நாடு பிடித்த ஏகாதிபத்தியப் பேச்சாகவே அமைந்தும் இருக்கிறது.

பிரதமர் ஈடனின் மனப்போக்குக் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. "இது சூயசு பிணக்கை மட்டுமே பொறுத்த விஷயமாக இல்லை. நாம் எத்தகைய உலகத்தில் வாழ விரும்புகின்றோம் என்பதை நிர்ணயிப்பதாக இருக்கிறது. அதாவது சட்டமும் ஒழுங்கும் உடைய உலகத்திலா அல்லது காடுடைய உலகத்திலா என்பதாகும்."

பிரித்தானியப் பிரதமரின் அச்சுறுத்தலில் அடங்கி இருக்கும் உள்ளடக்கத்தை ஒளிவு மறைவு இன்றித் தெள்ளத்தெளிய மேற்படி வாசகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஆங்கில தேசீய இனத்தைச் சேர்ந்த ஒருவரே மேற்கண்டவாறு பிரித்தானியப் பிரதமரின் மனப்போக்கை சித்தரிக்கும்பொழுது, அப்படிப்பட்ட மனப்போக்கினுல், எகிப்து ஆட்சித் தலைவரும் எகிப்து மக்களும், ஏனைய அராபியர்களும் எவ்வளவு ஆத்திரங்கொண்டிருப்பர் என்பது கற்பனைக்கும் அடங்காததாகும்.

எதிர்க்கட்சி உறுப்பினர் அத்துடனும் நிற்கவில்லை.

"சூயசு கால்வாயை நிர்வகிப்பதற்கெனப் பலவந்தமாக ஒரு அகில உலக அமைப்பு திணிக்கப்படுமானுல், அக்கால்வாயைத் தடையேதுமின்றிப் பயன்படுத்துவதற்கு, அதனுல் உத்தரவாதம் அளிக்க முடியாது" இவ்வாறும் அவ்வுறுப்பினர் நிலைமையை விளக்கி இருக்கிறார்.

"அந்தக் கால்வாயைப் பயன்படுத்தக்கூடாது என அராபியர்கள் தீர்மானித்துவிட்டால், அதைப் பயன்படுத்தக்கூடியதாக இல்லாமல் அவர்கள் செய்துவிடுவார்கள்." இவ்வாறு, அராபிய மக்களின் ஒப்புதல் இல்லாமல் இராணுவ பலத்தினுல் செய்யப்படுகிற ஏற்பாட்டினுல், எதிர்பார்க்கின்ற பலனைப் பெற முடியாது என, அவ்வுறுப்பினர் எடுத்துக்காட்டி எச்சரித்து இருக்கிறார்.

ரோபன்சு எனப் பெயரிய அந்தத் தொழிற்கட்சி உறுப்பினர், 'எகிப்து நாட்டு மீது நடவடிக்கை ஏதாவது எடுத்துக்கொள்ளப்படுமானுல் இலங்கைத் தீவிலுள்ள ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான தேயிலை, இரப்பர் காடுகளை அழித்துவிடுவதாக அங்குள்ள தொழிற்சங்கத்தினர் எச்சரித்துள்ளனர். அந்த அளவுடன் அது நின்றுவிடாது. ஆசிய நாடுகளில் எங்கெங்கு ஆங்கில நலன்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் மேற்படி எதிர்ப்பு கிளம்பும்" எனவும் இங்கிலாந்துப் பிரதமருக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தி உள்ளார்.

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, போலி மதிப்பைக் கைவிட்டு, சூயசுச் சிக்கலைத் தீர்த்துக்கொள்ள இங்கிலாந்தும் பிரான்சும் முன்வருவதுதான் வரவேற்கத்தகுந்ததாகும்.

ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கத்திகள்!

'போலீஸ் நடவடிக்கை'யில் கைப்பற்றப்பட்டதாம்!

ஐதராபாத் சமஸ்தானத்தின்மீது டில்லி 'போலீஸ் நடவடிக்கை' மேற்கொண்டபோது ரசாக்கர்களிடமிருந்து ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கத்திகள் கைப்பற்றப்பட்டனவாம். இவற்றை என்ன செய்வது என்பது அதிகாரிகளுக்குப் பெரும் தலைவலியாக இருக்கிறதாம்.

போலீசு அதிகாரிகளடங்கிய குழு ஒன்று 'இந்தக் கத்திகள் ஒவ்வொன்றிற்கும் விலை நிர்ணயிப்பது,' என்று முடிவு செய்திருக்கிறதாம். அடையாளமாக வைத்துக்கொள்ள விரும்புவோர் இவற்றை வாங்கிக்கொள்ளலாமாம்.

சர்க்கார், 'கத்தி, வாங்கலியோ கத்தி' என்று கூவி விற்கப் போகிறதாம்!

தமிழ் நாட்டிற்கு ஆந்திர ஆற்று நீர்?

காமராசர் நம்புகிறாராம்

ஆந்திர மாநிலத்திலும் கேரள மாநிலத்திலும் கடலில் விழுந்து வீணுகும் தண்ணீரைத் திருப்பிக் கொண்டுவந்தாலொழிய வட ஆற்காடு, தென்ஆற்காடு, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள வறண்ட நிலங்களில் பயிர்செய்ய முடியாதென்று முதலமைச்சர் காமராசர், கோவையில் கூறியுள்ளார்.

வடக்கிலிருந்து தெற்குவரை உள்ள எல்லா நதிகளையும் இந்திய அரசாங்கம் இணைக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும், தென் இந்தியாவில் உள்ள நதிகளில் அணைகள் கட்டுவதால் பயன் இல்லையென்றும், ஆந்திராவில் உள்ள கோதாவரி நதியிலிருந்தும் கேரளத்திலுள்ள பரம்பிக்குளம், பெரியாறு ஆகியவைகளிலிருந்தும் சென்னைக்குத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டுமென்றும், ரூ 200 கோடி இதற்காகச் செலவாகும் என்றும் அவர் தெரிவித்தாராம்.

சென்னை மிருகக்காட்சி சாலைக்கு அசாமிலிருந்து 17 அடி நீளமுள்ள ஒரு பெரிய மலைப் பாம்பு அன்பளிப்பாகத் தரப்பட்டுள்ளதாம்!

தாமாக இயங்கும் தறிகள்

தென்னுட்டு ஆலைகளே அதிகம் கோருகின்றனவாம்!

புதுடில்லி, செப் 13— தாமாக இயங்கும் தறிகள் அமைத்துக் கொள்வதற்கு சென்னை மாநிலத்தில் உள்ள ஆலைகள்தான் அதிகம் விரும்புகின்றனவாம்.

ஆகஸ்டு மத்திவரை வந்துள்ள மனுக்களில் 28,094 தறிகள் அமைத்துக்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளனவாம்; இவற்றுள் பெரும் பகுதி சென்னை மாநிலத்திலிருந்து வந்த மனுக்களாம்!

சென்னை மாநிலத்தில் உள்ள 40 நெசவாலைகள் 11 255 தாமாக இயங்கும் தறிகளுக்கு அனுமதி கோரியிருக்கின்றனவாம்.

பம்பாய், இரண்டாவது இடம் பெறுகிறதாம்; 34 ஆலைகள் 5,773 தறிகளுக்கு அனுமதி கோரியுள்ளனவாம்.

மொத்தம் அனுமதி கோரியுள்ள ஆலைகளின் எண்ணிக்கை 112 என்று தெரிகிறது.

இந்தத் தகவல்களை நுகர்ப்பொருள் உற்பத்தி இலாகா மந்திரி நித்தியானந்த கனுங்கோ மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

சட்ட விரோதமான வாய்தா பேரங்கள்

ஒடுக்குவதற்கு முயற்சி

சட்ட விரோதமான வாய்தா பேரங்களைக் கண்டுபிடிக்க இந்திய அரசாங்கம் ஒரு கண்காணிப்பு இலாகாவை நிறுவ முடிவு செய்துள்ளதாம்.

இந்த இலாகா, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க மாநில அரசாங்கத்திற்கு உதவி புரியுமாம்.

வாய்மொழி மூலமாகவே வாய்தா பேரங்கள் நடப்பதால், குற்றத்தை உறுதிப்படுத்தப் போதிய ஆதாரம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதென்றும் இதை ஒழிப்பதற்கான தீவிர வழிகளை மேற்கொள்ளப் போவதாகவும் கூறப்படுகிறது.

கருப்பு முடியும் வெள்ளை தாடியும்

வினேபா விளக்கம்

கோவை, செப். 14— 62 வயது பூர்த்தியடைந்த வினேபாவே, தமது தலை மயிர் கருப்பாக இருப்பதைக் குறித்தும், தன் தாடி மட்டும் முழுவதும் நரைத்து விட்டதற்கும் காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு எவ்விதக் கவலையோ ஏக்கமோ சிறிதளவும் கிடையாதென்றும், படுக்கையில் எதைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கும் பழக்கம் இல்லாத காரணத்தால் படுத்தவுடன் தூங்கிவிடுவதாகவும், அதனுல்தான் தலை முடி கருப்பாகவே இருக்கிறதென்று கூறியதாகத் தெரிகிறது.

தாடி மட்டும் நரைத்துவிட்டதே என்று கேட்டதற்கு அவர் புன்முறுவலுடன், 'உணவில் நான் தேன், நெய் உபயோகிப்பதுண்டு. தாடி உரோமத்தில் அவை படுவதாலேயே நரை ஏற்பட்டது" என்றார்.

எதற்கென்று தெரியவில்லை

பண்டித நேருவை மீண்டும் தன் நாட்டிற்கு வரும்படி அமெரிக்கத் தலைவர் ஐசனேவர் அழைத்துள்ளாராம்; நேருவும் அழைப்பை ஏற்றுக்கொண்டார் என்று தெரிகிறது.

காமராசரின் வீண் ஜம்பம்!

சேலத்தில் நடைபெற்ற இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில் முதலமைச்சர் காமராசர் பேசும்போது, மாற்றுக் கட்சியினரை காங்கிரஸ் இளைஞர்கள் தாக்கிப் பேச நினைப்பது இயற்கை என்றும், எதிர்க் கட்சியினர் முற்போக்கு — பிற்போக்கு என்றெல்லாம் பேசுகிறார்களே தவிர, அவர்களின் ஆவேசப் பேச்சும் உணர்ச்சியைத் தூண்டும் பேச்சும் மட்டும் முற்போக்காகிவிடுமா என்றும், உண்மையான குறைகளைப் போக்குவதுதான் சிறந்த முற்போக்கு என்றும் கூறினாராம்!

மேலும் அவர், காங்கிரஸ் கட்சியின் உயர்ந்த முற்போக்குத் திட்டத்தை, வேறு யாராலும் வகுக்க முடியாது என்றும் கூறி அவர் கொட்டமடித்திருக்கிறார்!

ஐந்தாண்டுத் திட்டங்களைத் தாக்கி எதிர்க் கட்சியினர் பேசி வருவதில் எவ்வித அர்த்தமுமில்லை என்றும் கூறி தம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டிருக்கிறார், முதலமைச்சர் காமராசர்!

பூனைகளை எலிகள் தாக்குகின்றனவாம்!

இரங்கூன், செப். 12— பூனைக்கு எலிகள் பயந்து ஓடின என்றால் யாரும் ஆச்சரியப்படமாட்டார்கள். ஆனுல் இரங்கூனில் இருந்து வேடிக்கையான செய்தி ஒன்று வந்துள்ளது! எலிகள் பூனைகளைத் தாக்கி விரட்டியடிக்கின்றனவாம்!

ஷான் மாகாணத்தில் உள்ள செண்டுங் கிராமங்களைச் சுற்றி ஏராளமான எலிகள் அட்டூழியம் செய்கின்றனவாம் நெல் களஞ்சியங்களை நாசப்படுத்தியும், பூனைகளைத் தாக்கியும் வீடுகளில் புகுந்து மக்கள் தூங்க முடியாமல் தொந்தரவு கொடுத்தும் வருகின்றனவாம்!

குஷ்டநோய்க்கு மருந்து!

"குஷ்ட ரோகத்தை ஒழித்துச் சுகம் பெறுவதற்குத் தனிப்பட்டவர்களுக்கும் வழிகள் உண்டு என்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும். 'குஷ்டம் தீரவே தீராது' என்ற பலரது எண்ணத்தையும் மாற்றி, 'அதற்கும் ஒரு மருந்து இருக்கிறது' என்று மக்கள் தெரிந்துக் கொள்ளவே இந்த விழா வாரம் கொண்டாடப்படுகிறது," என்று இந்திய குஷ்டரோக நிவாரண சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

குஷ்டரோகத்தை சல்போன் மருத்துவ சிகிச்சை முறை மூலம் குணப்படுத்திவிட முடியும் என்று பல குஷ்டரோக மருத்துவர்கள் நம்புகின்றனர்.

உணவுத் தானியங்கள் மீது கடன்

ரிசர்வ் பாங்கி உத்தரவு

பம்பாய், செப் 13— உணவு தானியங்கள், துணிகள், நூல் இவற்றின்மீது புதிதாகக் கடன் தரவேண்டாமென்று எல்லா பாங்கிகளுக்கும் ரிசர்வ் பாங்கி சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும் 31 தொழில்கள்

டெல்லியின் ஆதிக்கத்திற்கு உட்படும்

மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி, செப். 13— 'அகில இந்திய முக்கியத்துவம்' வாய்ந்த மேலும் 31 தொழில்களை டில்லி சர்க்காரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகிற மசோதா ஒன்றினை மக்கள் சபையில், மந்திரி எம். எம். ஷா கொண்டுவந்தார்.

இப்படி இந்தத் தொழில்களைப் டில்லியின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வருவதற்குக் காரணம், 'அவையும், டில்லி சர்க்காரின் தொழில் கொள்கைக்கு ஒப்ப வளர்க்கப்படுவதற்காகத்தான்' என்று அவர் கூறினாராம்.

யுத்தம் மூளும் அபாயம்

உலகெங்கணும் கவலை!

'ஈடன் திட்டம் போர்ப் பிரகடனமே!'

சூயஸ் சிக்கலுக்குப் பரிகாரம் எனக் கூறி எகிப்தின் ஆதிபத்திய உரிமைக்கும் சுதந்திரத்திற்கும் ஊறு விளைவிக்கும் திட்டம் ஒன்றை பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் வெளியிட்டது உலகத்தைப் பெருங்கவலையில் ஆழ்த்தியுள்ளது.

ஈடன் திட்டம் பகிரங்கமான போர்ப்பிரகடனம் என்றே திட்டம் அறிவிக்கப்பட்டபின் உலகெங்கிலுமிருந்து கேட்கும் எதிரொலிகள் கூறுகின்றன.

எகிப்தின் எச்சரிக்கை!

"சூயஸ் கால்வாயில் போக்கு-வரத்தை நிர்வகிக்க ஒரு உபயோகிப்போர் சங்கம் அமைக்க வேண்டும் என்ற மேலை நாடுகளின் திட்டம் எகிப்தின் ஆதிபத்திய உரிமைக்கு எதிராகச் செய்யப்படும் அப்பட்டமான—தெளிவான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும்; அந்தத் திட்டம் அமுல் செய்யப்படுமானால் அது யுத்தத்தில் கொண்டுபோய் விடும். அமெரிக்கா யுத்தத்தை விரும்பினால் இந்தத் திட்டத்தை ஆதரிக்கலாம்; அல்லது ஒரு சுமூகமான பரிகாரம் வேண்டுமென விரும்பினால் பிரிட்டனின் திட்டத்தை அது நிராகரிக்க வேண்டும்,"

என்று, கூறுகிற குறிப்பொன்றை எகிப்திய சர்க்காரின் உத்திரவின் பேரில் அமெரிக்காவில் உள்ள எகிப்தியத் தூதுவர் அகமது உசேன், அமெரிக்க வெளி விவகார இலாகா மந்திரி டல்லஸிடம் தந்திருக்கிறார்.

எகிப்தில்:

எகிப்திய போர்க் கப்பல்கள் இரகசியமாக 'ஒத்திகை' நடத்தியிருக்கின்றன; 'மூன்று நாட்களுக்கு இரவும் பகலும் இந்த 'ஒத்திகை' நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் 'அலெக்சாண்டிரியா துறைமுகம், மாலை 5-30 மணி முதல் காலைவரை மூடப்படும்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நாசர், தனது யுத்த இலாகா மந்திரியுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

அமெரிக்காவின் நிலை என்ன?

'அமெரிக்கக் கப்பல்கள் கால்வாய் வழியாகச் செல்வதை எகிப்து பலாத்காரம் உபயோகித்துத் தடுக்குமானால் அமெரிக்கா ஆயுத பலத்தால் கால்வாய் வழியாகக் கப்பல்களைச் செலுத்த முற்படாது' என்று பத்திரிகையாளரிடம் டல்லஸ் தெரிவித்திருக்கிறார்.

பொதுவில் அமெரிக்காவின் நிலையை விளக்க முயற்சித்த அவர், அமெரிக்கா பிரிட்டனின் திட்டத்தை ஏற்கிறது என்பதையே சுற்றிவளைத்து சொல்லியிருக்கிறார்.

எகிப்தியத் தூதுவர் தந்த ஆட்சேபக் குறிப்புக்கு டல்லஸ் உரிய மதிப்பளித்ததாகத் தெரியவில்லை.

நேருவின் அச்சம்

'சூயஸ் கால்வாயை உபயோகிப்போர் சங்கம் ஒன்றின் மூலம் நடத்துவது என்ற மேலைநாடுகளின் திட்டம் எகிப்தின் மீது திணிக்கப்பார்க்கும் ஒரு பரிகாரமாகும்; அந்தத் திட்டம் யுத்த அபாயத்தை உள்ளடக்கியதாகும்.

"ஒரு முடிவை பலாத்காரத்தின் மூலமாகவோ, அச்சுறுத்தல்களின் மூலமாகவோ திணிக்க முயல்வது, நாடுகளின் உரிமைகளை அவமதிப்பதாகும்.

"எனவே, மேலைநாடுகள் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் மூலம் சிக்கலுக்குப் பரிகாரம் தேடும் வழியை அடைத்து விடக்கூடாது,"

என்று, மக்கள் சபையில் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் சபையில் நிலைமை குறித்துக் கவலையும் அச்சமும் தெரிவித்த நேரு, இந்தியா, சமாதான வழிகளிலேயே சிக்கலுக்குப் பரிகாரம் தேடமுடியும் என்று தான் நம்புவதாகவும், இப்போதுகூடக் காலம் கடந்துவிடவில்லை—சமாதான வழிகளில் பரிகாரம் தேடுவதற்கு என்றும் கூறியிருக்கிறார்.

'நெருக்கடி முற்றுமானால் நேற்றுடன் முடிவடைந்த மக்கள் சபை, அவசரமாகத் தேவைப்படும்போது கூட்டப்படும்' என்றும் அவர் கூறியதாகத் தெரியவருகிறது.

சென்னை நகரத்தின் முன்னேற்றத் திட்டத்திற்காக 1956—57-ம் ஆண்டுக்கான வரவு-செலவில் சென்னை அரசாங்கம் ரூ. 9 இலட்சம் கடன் தருவதற்கு ஒதுக்கியுள்ளதாம்.

கண்டுபிடித்துவிட்டார் காமராசர்!

"மத்திய அரசாங்க ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டுத் தனித் தமிழ் நாடு வேண்டுமென்று கோருவது நாட்டிற்கே அபத்தானது"

என்று தேனாம்பேட்டைக் கூட்டம் ஒன்றில், சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் பேசினாராம்.

வடநாட்டவர் தென்னாட்டவர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக நினைப்பது தவறு என்றும், நக்கீரர் மரபில் உதித்ததாக—நெஞ்சுறுதி கொண்டவர்களாகப் பெருமை பேசிக்கொள்பவர்கள் ஏன் பயப்பட வேண்டுமென்றும், நாடு சிறு சிறு மாநிலங்களாகப் பிரிந்திருந்த காரணத்தாலேயே உள்நாட்டுக் குழப்பங்களை உண்டாக்கி அன்னியர்கள் இந்த நாட்டைக் கைப்பற்ற முடிந்தது என்றும், ஒற்றுமையைக் கைவிட்டால் நாடு மீண்டும் படுகுழியில் விழுந்துவிடும் என்றும் அவர் அறிவுரை பகன்றாராம்!

கழகக் கூட்டங்கள் ஒத்திவைப்பு

இம்மாதம் 23-ந் தேதி நடத்துவதாக இருந்த புதுவை தி. மு. கழக 3-ம் ஆண்டுத் துவக்க விழாவும், திராவிட நாடு விடுதலை நாள் கூட்டமும் அத்தேதியில் இங்கு நடைபெறவிருக்கும் ஓர் உப-தேர்தலை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டு, 30—9—56 அன்று நடத்துவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

10—9—56ல் சென்னை பூங்கா நகர் அறிவியக்க மன்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற இருந்தது; சில இடையூறுகளின் காரணமாகக் கூட்டம் 21—10—56 அன்று தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

யார்சொல்வதுசரி?

★

புதுடில்லி, செப். 13—

"பொதுத் தேர்தலுக்கான காலம் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை; இது, நவம்பர் மாதத்தில் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும்"

என்று, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சட்ட மந்திரி சி. சி. பிஸ்வாஸ் கூறியிருக்கிறார்.

"அடுத்தப் பொதுத் தேர்தல் பிப்ரவரி அல்லது மார்ச்சில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் எப்பொழுது நடைபெறுமென என்றால் திட்டவட்டமாகக் கூறமுடியாது; தேர்தல் குழுவினர்தான் இதைக் கூறமுடியும்"

என்று, மக்கள் சபையில் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

பதினைந்து நாட்களுக்குப் புத்த பிக்குவாக மாறுவார்!

தாய்லாந்து மன்னர் வாழ்க்கையில் ஒரு கட்டம்!

பாங்காங், செப். 12—

தாய்லாந்து மன்னரான புயும்போன் அமுல்டேட், பதினைந்து தினங்களுக்கு மட்டுமே புத்தபிக்குவாக இருப்பார் எனத் தெரிய வருகிறது.

தலை மொட்டை அடித்து, மஞ்சள் ஆடை புனைந்து, மக்கள் அளிக்கும் பிச்சையை ஏற்பதற்கு ஒரு பிட்சாபாத்திரத்தை ஏந்தி, அப் பதினைந்து தினங்களில் ஒவ்வொரு நாளும் தலைநகர வீதிகளில் அம் மன்னர் சுற்றிவருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த டிசம்பர் ஐந்தாம் தேதியுடன் அவருக்கு வயது 29 ஆகிறது. அரசர் துறவிக்கோலத்தில் இருக்கும் நாட்களில், அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், அவருடைய அரச காரியங்களைக் கண்காணித்துவருவார் என்று சொல்லப்படுகிறது.

மலாயா செல்லும் தமிழ்ப் பேராசிரியர்

முத்து இராசக்கண்ணனுக்குப் பாராட்டு

மலேயாப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பதவி ஏற்றுச் செல்லும் சென்னை அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. முத்து இராசாக் கண்ணனார் அவர்களைப் பாராட்டி 9—9—56 மாலை 6 மணிக்குச் சென்னை பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில், சென்னை மாணவர் மன்றம், தமிழாசிரியர் கழகம், பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகம் இவற்றின் சார்பில் ஒரு பாராட்டு விழா நிகழ்ந்தது. அமைச்சர் எஸ். இராமசாமி தலைமை வகித்தார். பேராசிரியர் மயிலை. சிவ-முத்து அனைவரையும் வரவேற்றார். பி. ஆலால சுந்தரனார் சென்னை அரசாங்கம் தமிழாசிரியர் நிலையினை உயர்த்தியுள்ளதைக் குறிப்பிட்டு நன்றி கூறினார். மேலும் சென்னையில் தமிழ்க் கல்லூரிகள் பலவற்றையும் நிறுவ வேண்டும் என்பதையும் விளக்கிக் கூறினார்.

பின்னர் பேசிய பேராசிரியர் அன்பு-கணபதி அவர்கள் சென்னை அரசாங்கம், தமிழின் முன்னேற்றத்திற்காக வேண்டிய அளவு ஊக்கம் காட்டவில்லை என்பதாகக் குறிப்பிட்டார்.

அமைச்சர் அவர்கள், பேராசிரியர் முத்து இராசாக் கண்ணனார் அவர்களைப் பாராட்டி வாழ்த்தினார். பின்னர் அரசாங்கம் தமிழின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவதில்லை என்று பலர் கூறுவது தவறு என்றும், அரசாங்கம் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதாகவும், அதனாலேயே தமிழை மாநில மொழியாக்க முடிவு செய்துள்ளதாகவும் கூறினார். மேலும், பல ஆண்டுகளாக ஆங்கில மொழியே பொது மொழியாக இருந்து வருகின்றது என்றும், அதனை எளிதில் மாற்ற முயல்வது கடினம் என்றும், எனவே சிறிது சிறிதாகத்தான் தமிழைப் புகுத்தவேண்டும் எனவும் கூறினார். தமிழ் முன்னேற, பொதுமக்கள் அரசியலாரின் துன்பங்களை உணர்ந்து அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் அவசியம் என்றும் கேட்டுக்கொண்டார்.

அடுத்துத் திரு. எஸ். எல். அருணகிரிநாதர், பகீரதன் (கல்கி), டி. செங்கல்வராயன், கே. பெருமாள், எஸ். கிருஷ்ணவேணியம்மையார், வ. ப. தாமரைக்கண்ணி அம்மையார் ஆகியோர் முத்து இராசாக்கண்ணனாரின் சிறப்பியல் புகளைப் பாராட்டி வாழ்த்தினர்.

இறுதியாகப் பேராசிரியர் முத்து இராசக்கண்ணனார் அவர்கள், தம்மை மகிழ்வுடன் வாழ்த்தி அனுப்பும் அறிஞர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

உங்களுக்குத் தெரியுமா?

பூ வேலைபாடுகள் உள்ள துணிகளின் உற்பத்தித் தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக அகில இந்திய கைவேலைப் பொருள்கள் போர்டு, சூரத்தில் முன்னேற்ற நிலையமொன்றை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தத் திட்டத்துக்காக, 1956 ஜூலை மாத இறுதிவரை மொத்தம் ரூ. 40,000-த்திற்கு மேல் செலவிடப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு மாவட்ட கிளைக்கழகத் தோழர்களுக்கு:

"23—9—56 முதல் நமது மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, டி. இராசரத்தினம் ஆகியவர்களுடன் நான் வரும்சமயம், அந்தந்த ஊர் கிளைக்கழகத் தோழர்கள், நான் பிறகு குறிப்பிடும் அஞ்சலில் கண்டுள்ள நாளில், கழகத் தோழர்களுடன் கலந்து பேசுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. என். ஓம்பத்தம் அறிவிக்கிறார்.

சொல்லும் செயலும்

★

"சர்க்கார் விரும்பியிருந்தால், நெசவாளர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் தானே இயங்கும் தறிகளைத் தென் இந்திய மில்களில் புகுத்தியிருக்கலாம்; ஆனால், நெசவாளர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் எதையும் சர்க்கார் செய்யாது"

என்று, கோவையில் சென்னை முதலமைச்சர் காமராசர் நிருபரிடம் கூறியிருக்கிறார்.

'சு. மி.': 13—9—56

"ஜவுளி மில்களில் தானே இயங்கும் தறிகளை பொருத்திக் கொள்வதற்காக எல்லா ராஜ்யங்களைக் காட்டிலும், சென்னை தான் அதிகத் தறிகள் வேண்டுமென மனுச் செய்துள்ளது,"

மாநிலங்கள் மக்கள் சபையில் பண்ட மந்திரி கனுங்கோ சமர்ப்பித்த அறிக்கையொன்றில் இது தெரியவருகிறது.

—'தினமணி': 14—9—56

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

★

வங்கனூர் (சித்தூர் மாவட்டம்):

9—9—56 மாலை 7 மணிக்கு, வங்கனூர் தி. மு. கழக ஆண்டு விழா தோழர் எஸ். கேசவன் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. கே. கண்ணப்பன், மு. அன்பழகன், திருத்தணி என். எ. ரஷீத் ஆகியோர் பேசிய பின், தோழர் க. அன்பழகன் அவர்கள் வடஎல்லைப் பகுதியில் தமிழர்களது கடமைகளை விளக்கியும், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழர்களின் உரிமைகளுக்காக இதுவரை செய்துவந்துள்ள தொண்டினை விவரித்தும் சொற்பொழிவாற்றினார்.

காட்டுப்பாடி (கல்லாவி—சேலம்):

8—9—56 இரவு 7 மணியளவில், மேற்படி கிளைக் கழகப் பொதுக்கூட்டம் தோழர் செயராமன் தலைமையில் நடைபெற்றது. தோழர் என் எ ரஷீத் சிறிது நேரம் பேசினபின் திராவிட மக்கள் தாழ்த்தப்பட்டுள்ள நிலையையும், உரிமை வாழ்வு பெற—திராவிட நாடு விடுதலை பெற வேண்டிய அவசியத்தையும் விளக்கித் தோழர் க. அன்பழகன் பேசினார்.

திருமணம்

9—9—56 காலை 7 மணிக்கு, தோழர் வெ. கு. மாறன்—தோழியர் கண்ணம்மாள் திருமணம், தோழர் க. அன்பழகன் தலைமையில் நிகழ்ந்தது. தோழர்கள் என். எ. ரஷீத், முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தோட்டப்பாளையம்

வேலூர் — தோட்டப்பாளையம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் 9—9—56 மாலை 6½ மணியளவில், தோழர் வி. எல். கார்த்தன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் திராவிடமணி, புகழேந்தி, ஆ. கருத்தோவியன், என். எ. ரஷீத் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் தி. மு. கழகம் எத்தகைய கொள்கைகளுக்காகப் பாடுபடுகிறது என்பதையும், தேர்தலில் ஈடுபடுவதின் நோக்கத்தையும் குறித்து விரிவாக விளக்கினார். எஸ். பி. பீடித் தொழிலாளர் கிளையைச் சார்ந்த இயக்கத் தோழர்கள், தோழர் க. அன்பழகன் அவர்களுக்குக் கைத்தறித் துண்டு அணிவித்தனர்.

சென்னை—கிண்டி பொறியியல் கல்லூரியில்...

சென்னை—கிண்டி பொறியியல் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் 11—9—56 மாலை 6 மணிக்கு 'பாரதியார் நினைவு நாள்' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவர் தலைவர் துரைவேதகிரி தலைமை வகித்தார். அவர் தமது முன்னுரையில் பாரதியாரின் தமிழ்த்தொண்டை விளக்கியும், தோழர் க. அன்பழகன் அவர்களை வரவேற்றும் பேசினார். பின்னர் அன்பழகன் அவர்கள் பாரதியாரின் நினைவு நாளைக் கொண்டாடுவது இன்றைய தாழ்ந்த தமிழகத்திற்கு எவ்வளவு உயர்ந்த பயனைநல்கக் கூடியதாக உள்ளது என்பதை எடுத்துக் காட்டியும் பாரதியார் தேசியத் தொண்டர் மட்டுமன்றி சமுதாய சீர்திருத்தவாதி எனவும், தேசிய உணர்ச்சியும் மொழிப்பற்றும் மிக்கவர் மது மலர்ச்சியின் தூதுவர் என விளக்கிப் பேசினார். அவரது தமிழ் நாட்டுப் பற்று நமது மக்களிடத்தில் மலர மாணவர்கள் தொண்டாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

'தென்றல் திரை' முகவரி மாற்றம்

பி. பி. பத்மநாபன்,
'தென்றல் திரை'
34 சர். தியாகராய ரோட்
(பாண்டி பசார்)
தியாகராயநகர், சென்னை-17.

இருந்து முகந் திருத்தி 400 கேட்டனர்- ‘இந்தா 170’ என்று வீசி எறிந்தார் நேரு!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எடுத்துக்கொண்டால்கூட மக்கள் எண்ணிக்கைப்படி குறைந்தது 700 கோடி ரூபாயாவது ஒதுக்கியிருக்க வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நேரு சர்க்காரின் வஞ்சனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நம் நாட்டிற்கு 1,000 கோடி ரூபாயாவது ஒதுக்கிப் பெருந் தொழிற்சாலைகள், அணைக்கட்டுத் திட்டங்கள் அமைக்க முன்வந்திருக்கவேண்டும். நேரு பண்டிதர் செய்ததென்ன? 170 கோடி ரூபாய்தான் தரமுடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

“நம் மாநில அமைச்சர்கள் டில்லி சென்று நேரு பண்டிதரைப் பேட்டிகண்டு வணங்கி, ‘எங்கள் மாநிலத்தில் வடநாடு தென்னாடு என்ற வேற்றுமை வளர்ந்து வருவதைத் தாங்கள் அறிவீர்களல்லவா?’ என்று கேட்டனர்.

‘ஆம்; இருப்பதாக உணருகிறேன்; அதற்கென்ன இப்போது?’

‘அன்புள்ள நேருஜி! அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் கொட்டம் அடங்கவாவது தாங்கள் 500 கோடி ரூபாய் தரவேண்டுகிறோம்.’

‘அதெல்லாம் முடியாது—அவ்வளவு பெருந்தொகையை......!’

ரூ. 400 கோடியாவது—தயை செய்யும் பிரபோ!’

‘இதுவும் பெருந்தொகைதான்; முடியாது—முடியாது!’

மூக்காடிட்டு ஓடிவந்தார்கள்-எங்களை மட்டும் பார்த்து முறைக்கிறார்கள்!

ரூ. 300 கோடியாகிலும்—தயவு பிறக்குமா?’

‘இன்னும் கொஞ்சம் குறைத்துக் கேளுங்கள், பார்க்கலாம்!’

‘பிரபோ—250 கோடி ரூபாய்...!

‘இல்லையில்லை! 170 கோடி ரூபாய் தான் தரமுடியும்; பேசாமல் செல்லுங்கள்,’ என்று நேரு பண்டிதர் கூறிவிட்டார்!

“காமராசர்களும் சுப்பிரமணியங்களும் வாயை மூடிக்கொண்டு திரும்பித்தான் வந்தனரேயன்றி, சிறிதாவது தன்மான உணர்ச்சியுடன் இந்த அக்கிரமத்தை எதிர்த்துக் கேட்டார்களா?

“இவர்களின் போக்கைக் காணும் எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. பலநாட்கள் பட்டினியாய் இருந்த ஒருவன் தனது நண்பனைக் கடைவீதியில் சந்தித்தானாம்; உடனே இருவரும் அளவளாவிப் பேச, முதலாவது நண்பன் மற்றவனைத் தனது வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தானாம்; விருந்துக்கு அழைத்தவனின் துணைவியோ எச்சில் கையால்கூடக் காக்கையை விரட்டாத ‘புண்ணியவதி’; அவளுக்கு அடங்கி நடக்கும் இந்தக் கணவன், ஒப்புக்கு நண்பனை விருந்துக்கு அழைக்க அவனும் பசியால் வாடியிருந்ததால் ஏற்றுக்கொண்டு, இருவரும் வீடுவந்து சேர்ந்தனர்!

“பசித்த நண்பனை வீட்டுத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்று தனது துணைவியை அழைத்துக் கெஞ்சி, நயந்து பேசி, அவள் கூந்தலை வாரி முடித்துத் தனது வேண்டுகோளைத் தெரிவித்தானாம்! இவ்வளவு கெஞ்சிக் கூத்தாடியும் உடனே அந்த அம்மை கோபாவேசத்துடன் குதித்தெழுந்து, பழைய முறம் ஒன்றை எடுத்துக் கணவனைச் சாடினாளாம்!

இருந்து முகந்திருத்தி
ஈரோடு பேன் வாங்கி
விருந்து வந்ததென விளம்ப
பாடினான் ஆடினான்—ஆடிப்
பழமுறத்தால் சாடினாள்—
ஓடோடத்தான்!

“அதைப்போல நம் மாநில முதலமைச்சரும் நிதி அமைச்சரும் இருந்து முகந் திருத்தி நானூறு கேட்டனர்! ‘இந்தா 170’ என்று வீசி எறிந்தார் நேரு! இந்த அநீதியைத் தட்டிக் கேட்கத் தகுதியும் திறமையுமற்று மூக்காடிட்டு ஓடிவந்த காமராசர்கள் எங்களை—திராவிட முன்னேற்றக்கழகத்தினரை முறைத்துப் பார்க்கிறார்கள்! இந்தப்பரிதாபத்திற்குரிய அமைச்சர்களைப் பார்த்து நாம் அனுதாபப் படுகிறோம்!

கப்பலோட்டினார்-செக்கிழுத்தார்-காங்கிரஸ் ஆட்சி அமைய வழி செய்தார்-இறுதியில் வீர சிதம்பரனார் கண்ணீர் வடித்தார்!

“வெள்ளையர் இந்நாட்டை ஆண்டபோது அவர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கும் வகையில் வீரர் வ. உ. சிதம்பரனார் தனது செல்வத்தையெல்லாம் செலவிட்டு, மற்றவர்களின் ஆதரவையும் கொண்டு முதன் முதலாகக் கப்பலைக் கட்டினார்! கடலில் மிதக்கவிட்டார்! ‘நம் மூதாதையர் கடல் கடந்து வாணிபம் செய்து புகழ் பெற்றவர்கள்’ என்பதை, அந்த வீரர், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு நினைவூட்டினார்—எச்சரித்தார்! அதுமட்டுந்தானா?

“தேசியப் போராட்டத்திலே தீவிரச்சோதனைகளுக்கு ஆளானார்—செக்கிழுத்தார் — தனது வாழ்வே சீர்குலையும் அளவுக்குப் பணியாற்றினார்!

“அவரைப் போன்ற உத்தமர்களின் உழைப்புதான் இன்று காங்கிரஸ் ஆட்சி அமைய வழி செய்தது. ஆனால் காங்கிரஸ் ஆட்சியின் இன்றையநிலையோ சொல்லொணுக் கொடுமையை விளைவித்திருக்கிறது.

“பெருந் தொழில் திட்டங்களும் அணைக்கட்டுகளும் வடக்கேதான்! இங்கே—குடிசைத் தொழில்! வடக்கே—கோடானுகோடி பணச் செலவில் ஆலைகளும் அணைக்கட்டுகளும் அமைக்கப்படுகின்றன!

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

செப். 16 : மதுரை
17 : சோழவந்தான்
18 : சின்னமனூர்
19 : குளமங்கலம்
20 : சமயநல்லூர்
21 : அம்மயநாய்க்கனூர்
22 : ஆத்தூர் (மதுரை)
23 : திருச்சி

கடையநல்லூர் மறுமலர்ச்சி மன்ற 2-வது ஆண்டு விழா

18—9—56 இரவு 7 மணியளவில், மறுமலர்ச்சி திடலில், தோழர் சி. நடராசன் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் பி. ஆறுமுகம் விழாவைத் துவக்கி வைப்பார்; தோழர் ப. புகழேந்தி பேசுவார்.

தூத்துக்குடியில் தீ விபத்து

கழகத் தோழர்களின் கடமை உணர்ச்சி

தூத்துக்குடி, செப். 12— கடந்த 10-ந் தேதியன்று மாலை சுமார் 5½ மணிக்கு, இந்நகர் போல் நாய்க்கன் பேட்டைக்கு அருகிலிருக்கும் ‘தோல் ஷாப்’ என்ற இடத்தில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. இத்தீவிபத்தின் விளைவாக மூன்று வீடுகள் எரிந்து சாம்பலாயின. ரூ 200 பெறுமான பொருள் தீக்கிரையாக்கப்பட்டது. கழகத் தோழர்கள் விரைந்து அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு தந்தனர்.

6¾ படி அரிசி, 1 படி பருப்பு, ரூ. 7—4—0 ஆகியவை சேகரித்து, விபத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்குக் கொடுத்தனர். கழகத் தோழர்களின் கடமை உணர்ச்சி பாராட்டற்குரியதாகிறது! (ந. தி)

வலங்கைமான் பஞ்சாயத்துத் தேர்தல்

தி. மு. கழகச் செயலாளர் போட்டியின்றித் தேர்வு

6—9—56-ல் நடைபெற்ற வலங்கைமான் நகர பஞ்சாயத்து போர்டு 6-வது தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் மு. விசுவநாதன் அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார். (த. வி.)

வடக்கே எஞ்சின்-தெற்கே பெட்டி!

வடவரிடம் சிக்கி தென்னாடு சீரழிகிறது!

“இரயிலை ஓட்டும் எஞ்சின் தயாரிப்பு வடக்கேதான்! அதில் பூட்டப்படும் பெட்டிகள்தான் இங்கே தயாரிக்கப் படுகின்றன — அதுவும்கூட வெள்ளையர் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட தொழிற்சாலையை ஏதோ பெயரளவுக்குச் சற்று விரிவு படுத்திப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன!

“இரயில் விஷயத்தில் மட்டுமல்ல இந்த நிலை! ஆட்சித் துறையிலும் வடநாடு எஞ்சினாகவும், தென்னாடு அதில் பூட்டப்படும் ஓட்டைப் பெட்டியாகவும் இருந்து வருகிறது. எஞ்சின் இழுத்த இழுப்புக்கெல்லாம் பெட்டி ஓடுவதுபோல, நம் மாநில சர்க்கார் வடவரிடம் சிக்கிச் சீரழிகிறது.

“இவ்வித இழிநிலையிலிருந்து நமது தாயகத்தை மீட்கும் தேசீயப் பணியில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டிருக்கிறது.

“அந்தத் திருப்பணியில்—நம் தாயகத்தை மீட்கும் பெரும் நற்பணியில் நீங்களெல்லாம் ஈடுபட வாரீர் என்று மனமார அழைக்கிறேன்.”

—என, 10-9-56 அன்று செங்குன்றம்—கிராண்ட்லைன் வ. உ. சி மன்ற 4-ம் ஆண்டுவிழாவில், அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றியபோது குறிப்பிட்டார்கள்.

****

திராவிட நாடு விடுதலை (பிரிவினை) நாள் மாபெரும் கூட்டம்

★

18—9—56 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு

கான்ரான்ஸ்மித் நகர் (திரு.வி.க.) திடலில்

★

அண்ணா

என். வி. நடராசன்	மு. கருணாநிதி
கே. ஏ. மதியழகன்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
சத்தியவாணி முத்து	அலமேலு அப்பாதுரை
தில்லை-வில்லாளன்	ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
காஞ்சி—மணிமொழியார்	டி. சண்முகம் எம்.எல்.ஏ.
டி. கே. பொன்னுவேலு	எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக் கூட்டங்கள்

★

மதுரை :

மதுரை நகரில் செப். 16-ந் தேதியன்று திராவிட நாடு விடுதலை நாள் விழாக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொள்வார்.

அன்று பகல், தோழர் மு. கருணாநிதி அவர்கள் நகரின் முக்கிய இடங்களில் எல்லாம் கழகக் கொடியேற்றுவிப்பார்.

மாலையில் தியாகராயர் படிப்பகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

இரவு 7-மணிக்கு திலகர் திடலில் நடைபெறும் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, எஸ். முத்து முதலியோர் பேசுவார்கள்.

சென்னை—புதுப்பேட்டை:
16—9—56 மாலை 6-மணிக்கு சென்னை 37-வது வட்டம் புதுப்பேட்டை அண்ணா படிப்பகச் சார்பில், பிரசன்ன விநாயகர் கோயில் தெரு திடலில், தோழர் என். எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், கோ. இளவரசு, தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் பேசுவர்.

சென்னை—வண்ணை :
17—9—56 மாலை 6-மணிக்கு வண்ணை, சோலையப்பன் தெரு, அண்ணா படிப்பகம் முன் நடைபெறும். தோழர் வே. கபிலன் கொடியேற்றுவார். தோழர் எஸ். பி. தங்கையா படிப்பகத்தைத் திறந்து வைப்பார்.

சென்னைக் கல்விச் சங்கம்

16—9—56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில் ‘பழமையும்-புதுமையும்’ என்னும் பொருள் பற்றி திரு த. வே. முருகேசனார் தலைமையில், திரு. வி. ப. கோவிந்தசாமி சொற்பொழிவாற்றுவார்.

சென்னை — வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

16—9—56 காலை 10 மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், திரு. ரா. சக்கரபாணி அவர்கள், திருக்குறளில், ‘விருந்தோம்பல்’ என்ற அதிகாரத்தை விளக்கிப் பேசுவார்.

கோவை வட்டம்:

18—9—56 மாலை, 30-வது வார்டு செல்வபுரத்தில், தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் பேசுவார்.

20—9—56-ல், ஒண்டிப்புதூரில் தோழர் எம். எஸ். இராமசாமி சொற்பொழிவாற்றுவார்.

21—9—56 மாலை குனியமுத்தூரில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றுவார்.

21—9—56 மாலை ம. ந. க. வீதி (கோவை)யில் தோழர் எம். எஸ். இராமசாமி உரையாற்றுவார்.

22—9—56 மாலை 29-வது வார்டு அழகிரி படிப்பகச் சார்பில் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசுவார்.

22—9—56 மாலை 1, 2-வது வார்டு பாப்பநாய்க்கன் பாளையம் கிளைகளின் சார்பில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசுவார்.

23—9—56 மாலை சிதம்பரம் பூங்காவில் தோழர்கள் மு. கருணாநிதி, முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

16—9—56 காலை 9 மணியளவில், சென்னை 24-வது வட்ட திரு வி. க. மறுமலர்ச்சி மன்றத்தில், தோழர் இளம்பிறை தலைமையில், ‘உதய சூரியன்’ என்ற தலைப்பில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

சென்னை மாணவர் மன்ற உறுப்பினர் பொதுக்கூட்டம்

16—9—56 மாலை 4 மணிக்கு, சென்னை-1, இரத்தின முதலி தெரு, எண்-17, மன்ற நிலையத்தில் நடைபெறும். மன்றத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் குறித்தும், மலர் வெளியீடு, போட்டிகள் முதலியன குறித்தும் ஆய்ந்து முடிவு செய்யப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.